பக்கங்கள் 6

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 22 | பங்குனி 25 | ஜ-அ 20 | இதழ் 57
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 7-4-80

CAMPUS LIBRARY UNIVERSITY PERIODICALS DIVISION RECEIVED

### ★ தமிழ் மக்களுடன் தமிழில் தொடர்பு

# அரசாங்கம் புதிய நடவடிக்கை!

## சகல செயலகங்களிலும் 3 தமிழ் எழுதுவினைஞர்கள்

(கொழும்பு)

**தமிழ்பேசும் மக்களுடன் அரசாங்கம் தமிழிலேயே தொடர்புகொள்ளும் என்று அரசாங்கம் ஏற்கனவே அளித்த உத்தரவாதத்தின் மீது, நாடுபூராவுமுள்ள சகல அரசாங்க செயலகங்களிலும் மூன்று தமிழ்எழுதுவினைஞர்கள் அதிவிரைவில் நியமிக்கப்படவிருக்கின்றனர்.**

அரசாங்கம் மேற்கொண்ட ஒரு அவசர முடிவைத்தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை வெகுவிரைவில் செயல்படவிருக்கிறது என்று முக்கிய அரசியல்பிரமுகர் ஒருவர் "ஈழநாடு''விடம் தெரிவித்தார்.

1978ம் ஆண்டில் அரசியலமைப்பில் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி, தமிழ்பேசும் மக்கள் தமிழ் மொழியில் அரசாங்க செயலகங்களுடன் தொடர்பு கொண்டால், தமிழிலேயே பதிலளிக்கப்பட வேண்டும் என்ற நிலைமை உண்டு, ஆனால் இன்றுவரை இது நடைமுறையில் அமுல்படுத்தப்படவில்லை.

அரசாங்கத்தின் புதிய முடிவுக்கிணங்க, நாடு பூராவுமுள்ள அரசு செயலகங்களில் (கச்சேரிகளில்) மூன்று தமிழ் எழுது வினைஞர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் இவர்களின் உதவியுடன், தமிழ் பேசும் மக்களுடன் தமிழிலேயே கடிதத்தொடர்புகள் வைத்துக்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்ட அரசியல் பிரமுகர் தெரிவித்தார். [ம]

### சுன்னாகம் ரயில் நிலையத்தில்

## தாலிக்கொடி அறுத்தவரை துரத்திப் பிடித்தனர்!

(யாழ்ப்பாணம்)

தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடியவனைப் பொதுமக்கள் துரத்திப் பிடித்துப் பொலிஸ் நிலையத்தில ஒப்படைத்தனர். இச் சம்பவம் நேற்று அதிகாலை சுன்னாகத்தில் நிகழ்ந்தது.

நேற்றுக்காலை யாழ்தேவியில் பயணம் செய்த உறவினர் ஒருவரை வழியனுப்புவதற்கு சுன்னாகம் கொட்டைக்காட்டைச் சேர்ந்த திருமதி பராஜசிங்கம் சுன்னாகம் ரயில் நிலையத்துக்குச் சென்றிருந்தார். ரயில் கடவையில் அவர் சென்றபோது அங்கு நின்ற இளைஞன் ஒருவன் திருமதி பராராஜசிங்கத்தின் கழுத்திலிருந்த பதினேராயிரம் ரூபாய் பெறுமதியான தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தார். திருமதி பராராஜசிங்கம் கூச்சலிட்டுக் கொண்டு பின்தொடர அவருடன் நின்ற மகள் ரஜனியும் கூச்சலிட்டபடி இளைஞனைத் துரத்திச் சென்றுர். இச் சமயம் அப்பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த மயிலணி கண்காணிப்புக்குழுவினர் தாலிக்கொடியைப் பறித்துக் கொண்டு ஓடுபவரைத் துரத்திப்பிடிப்பதில் ஈடுபட்டனர். இக்குழுவைச்சேர்ந்த சோமசுந்தரம் பாலசுந்தரமும், ராஜரத்தினம் பாஸ்கரமூர்த்தியும் அவரைத் துரத்திப் பிடித்தபோது தாலிக்கொடியுடன் ஓடியதாகக் கருதப்படும் 23 வயது ஜயாத்துரை துரைராஜா தம்மிடமிருந்த சிறு கத்தியினல் பாலசுந்தரத்தின் வயிற்றில் காயமேற்படுத்தினர். ஆயினும் அவரை மடக்கிப் பிடித்துத் தாலிக்கொடியையும் கைப்பற்றிய அவர்கள் துரை

(6-ம் பக்கம் பார்க்க)

## பாரதிய ஜனதா கட்சி; தலைவர்: வாஜ்பாய்

[புதுடில்லி]

ஜனதாகட்சி வரிசையில் நேற்று, மற்றுமொரு புதிய அரசியல் கட்சி உதயமானது!

பாரதிய ஜனதா கட்சி என்ற இப்புதிய அரசியல் கட்சியின் தலைவராக முன்னுள் வெளிவிவகார அமைச்சர் திரு. வாஜ்பாய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பத்திரிகை நிருபர்கள் மத்தியில் அவர் நேற்று உரையாற்றுகையில், எதிர்வரும் சட்டசபைத் தேர்தல்களில் இந்திரா-காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு செய்துகொள்ளும் என்றும், சர்வாதிகாரத்துக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டுவதே தமது கட்சியின் இலட்சியமாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

(முன்வந்த செய்தி 4-ம் பக்கம்)

## ஆனைமடுவ இடைத்தேர்தல்

(புத்தளம்)

ஆனைமடுவ இடைத் தேர்தலுக்கான வேட்பாளர் மனுப் பத்திரங்கள் இன்று புத்தளம் கச்சேரியில் ஏற்றுக் கொள்ளப்படும்.

43,416 வாக்காளர்களைக் கொண்ட இத்தொகுதியின் இடைத்தேர்தலில் போட்டியிட இதுவரை எட்டுபேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

### நாளை யாழ். நகரில்

## பொலிஸ் 'ஹெவிஸி பாண்ட்' வாத்திய விருந்து

(யாழ்ப்பாணம்)

புதுவருட தினத்தையொட்டி, யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும், பொலிஸ்— பொதுமக்கள் நல்லுறவுக் கமிட்டியினர், பல விளையாட்டுப் போட்டிகளையும் கலாச்சார-இசை நிகழ்ச்சிகளையும் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

இதன் ஒரு சிறப்பு அம்சமாக, சர்வதேசப் புகழ்பெற்ற பொலிஸ் 'ஹெவிஸிபாண்ட்' வாத்தியக் குழுவினர் நாளைமாலை திறந்தவெளியரங்கில் வாத்திய விருந்தளிப்பார்கள்.

நாளை நடைபெறும் இந்த இலவச இசைவிருந்து யாழ்ப்பாணம் பொலிஸ் — பொதுமக்கள் நல்லுறவுக் கமிட்டியின் ஆதரவில் நடைபெறுகிறது:

இன்று சாவகச்சேரியிலும், நாளைமறுதினம் பருத்தித்துறையிலும் "ஹெவிஸி பாண்ட்'' வாத்தியக் குழுவினர் இசை விருந்தளிப்பார்கள்.

இக்குழுவினர் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

## கனகரத்தினம் அமெரிக்க விஜயம்

[யாழ்ப்பாணம்]

சிக்காகோ நகரில் நடைபெறவிருக்கும் அனைத்துலக ரோட்டறிக்கழக மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ் ரோட்டறிக் கழகத்தின் சார்பில அதன் தலைவரும், பதில் நீதவானுமான திரு. எஸ். கனகரத்தினம் அமெரிக்கா செல்லவுள்ளார். இம்மகாநாடு அடுத்தமாதம் 31-ந் திகதி தொடக்கம் ஜூன்மாதம் 5-ந் திகதிவரை நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை அமெரிக்கா புறப்படும் இவர் மூன்று மாதங்கள் அங்கு தங்கியிருந்து அங்குள்ள ரோட்டறிக் கழகங்களையும் சந்தித்து கலந்துரையாடுவார்

யாழ். திவ்வியஜீவன சங்கத்தின் தலைவரான திரு. கனகரத்தினம் அமெரிக்காவில் சுவாமி சச்சிதானந்தரினல் நிறுவப்பெற்றுள்ள யோக சமாஜ ஒன்றியத்திற்கும் சென்று தரிசிப்பார். அமெரிக்கா முழுவதும் இந்த ஒன்றியம் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

மற்றும் சமய நிறுவனங்களுக்கும் இவர் செல்வார். (அ)

## யாழ்ப்பாணம்-கொக்குவில் புதிய பஸ்சேவை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கும் கொக்குவிலுக்குமிடையே புதிய பஸ்சேவையொன்று இம்மாத முடிவுக்குள் ஆரம்பித்து வைக்கப்படும்.

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கொண்ட துரித நடவடிக்கைகளைத் தொடர்ந்தே புதிய பஸ்சேவை ஆரம்பமாகவிருக்கிறது.

யாழ். அரசாங்க அதிபருக்கு அண்மையில் கொக்குவிலில் பொது வரவேற்பு அளிக்கப்பட்டபோது, மாவட்டநீதிபதி திரு. கே. பாலகிட்ணர்தலைமையிலான கொக்குவில் அபிவிருத்திச்சபை சமர்ப்பித்திருந்த ஒரு மகஜரில் யாழ்ப்பாணத்துக்கும் கொக்குவிலுக்குமிடையே பஸ் சேவையொன்று அவசியம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று யாழ். அரசாங்க அதிபர் திரு யோகேந்திரா துரைசுவாமியை வலியுறுத்தியிருந்தது. இப் பஸ்சேவையை ஆரம்பிக்க தாம் நடவடிக்கை எடுப்பதாக யாழ். அரசாங்க அதிபர் உறுதிதெரிவித்திருந்தார்.

இம்மாதம் வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்கு வரவிருக்கும் 25 புதிய பஸ் வண்டிகளில் ஒரு பஸ் வண்டி யாழ்ப்பாணம் - கொக்குவில் சேவைக்கு விடப்படும்.

வெங்காய விதை

இறக்குமதி செய்யப்பட்ட பூசா ரெட்ரக வெங்காய விதைகள் இன்றுமுதல் கிடைக்கும்

உங்கள் தேவைக்கு:

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்

107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

### ★ யாழ்ப்பாணத்தில் புதிய திருட்டுச்சம்பவங்கள்:

# நவநாகரிக யுவதிகளின் 'கைவரிசை!'

## பொலிஸார் வலைவிரிப்பு!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில், பெண் கொள்ளைக்கோஷ்டி ஒன்று திட்டமிட்டு இயங்கி வருவதாகப் பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இக் கொள்ளைக் கோஷ்டியில் நவநாகரிக யுவதிகளேகூடுதலாக உள்ளனர் என்றும், இவர்கள் பாடசாலைப் பிள்ளைகளிடம் தமது கைவரிசையைக் காட்டிவருவதாகவும் யாழ். பொலிசார் தெரிவித்தனர்.

இந்தஇளம்பெண்கள், நாகரீக உடையணிந்து தோளில்ஆடம்பரப்பை தொங்க பெண்கள் பாடசாலைக்குச்சென்று அப் பாடசாலையில் கல்விபயிலும் சிறுபெண் குழந்தைகளை அவர்களின் பெற்றோர்கள் தேடுவதாகக்கூறி வெளியே அழைத்துச்சென்று அவர்களின் நகைகளைத் தந்திரமாக எடுத்துவிட்டு அச்சிறுர்களை அவ்விடத்திலேயே விட்டுச்சென்ற துணிகரச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இப் பெண் கொள்ளையரிடமிருந்து தங்களது பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்ள ஒவ்வொரு பெற்றோரும் தகுந்த நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டுமென்றும் அதேவேளை பாடசாலை ஆசிரியர்களும் தங்கள் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும் என்றும் பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இம் மாதம் முதலாம் திகதி யாழ் கன்னியர்மடம் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி பயிலும் 5 வயது மாணவி ஒருவரைத் தேடி மேற்படி

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிப்
பழைய மாணவர் சங்க
ஆண்டுவிழா

1980-04-12 சனிக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் மாலை 6 30 மணி வரை வழமையான நிகழ்ச்சிகளுடன் கல்லூரியில் நடைபெறும்.

பழைய மாணவர் அனைவரும் பங்கு கொள்க.

சு. ஏழூர்நாயகம்,
சி. யோகநாதர்,
இணைச்செயலாளர்.

மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

5409

## Appointment Vacant

1. Lecturer in Electrical Engineering.
2. Lecturer in Mechanical Engineering

Graduates or those awaiting results can apply. Salary scale Rs. 650/- to 1,200/- per mensem and allowances.

3. Instructor - Machine shop Practice to take Turner & Fitter classes.

Salary scale Rs. 300/- to 500/- per mensem, and allowances.

Apply on forms available in Institute office.

DIRECTOR,
Jaffna College Technical Institute
Vaddukoddai.

5413

## Classes

New Sessions begin 12-5-80
Application close 22-4-80

A part from normal courses run in past years following courses are additional:

1. Preliminary Technician course for one year for those who do not have G. C. E. (O. L) passes in Mathematics and Physics
2. One-year Craft course for Turners & Fitters

Application forms and scale of fees are available in Institute Office at one rupee each.

DIRECTOR,
Jaffna College Technical Institute
Vaddukoddai.

5412

இரண்டாவது நினைவு அஞ்சலி



டாக்டர் க. செல்லத்துரை
டாக்டர் செல்லத்துரை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

5392

# விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்வனவு

(புலோலி)

யாழ். மாவட்ட விவசாயிகளின் நன்மைகருதி ஐம்பது புசலுக்கும் கூடுதல் நெல்லை வைத்திருக்கும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லைக் கொள்வனவு செய்ய நெல் சந்தைப்படுத்தும் சபை திட்டமிட்டுள்ளது

விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த நெல்லை நெல்சந்தைப்படுத்தும் சபையின் உத்தரவு பெற்ற கூட்டுறவுச் சங்கக் கொள்வனவுகாரர்களிடமோ அனுமதிபெற்ற முகவர்களிடமோ நேரடியாக விற்பனை செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது. நேரடியாக நெல்லை விற்பனைசெய்யும்போது விவசாயிகளுக்கு உடன் பணம் வழங்கவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது அத்துடன் வயலில் இருந்து நெல்லைக் கொண்டுவந்ததற்கான வண்டிக்கூலியும் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளிடமிருந்து இடைநிலை வியாபாரிகள் நெல்லைக் கொள்வனவுசெய்து பின்னர் விற்பனைசெய்து இடைநிலை வியாபாரிகள் கூடிய இலாபத்தைப் பெறுவது நீக்கப்பட்டு விவசாயிகளே கூடிய இலாபத்தைப் பெற வழியேற்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது

# நல்லூர் கிராமசபை கேள்வி அறிவித்தல்

திருநெல்வேலி மாதிரிச் சந்தையின் கீழ்மாடியிலுள்ள ஏ 1 தொடக்கம் ஏ 7 வரையிலான (பலாலி வீதிப்பக்கம்) கடைகளைக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் 25-04-1980-ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்படிவத்தை உள்ளடக்கிய காகித உறையின் இடது பக்க மேல்மூலையில் "திருநெல்வேலி மாதிரிச் சந்தைக் கடைகளுக்கான கேள்விகள்" எனக் குறிப்பிட்டு கிராமசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு கடைக்குமான மாதாந்த வாடகை ரூபா 150/-. இது காலத்துக்குக்காலம் மீளவாயப்படும். கேள்விகள் ஒவ்வொரு கடைக்கும் ரூபா 2000/- வீதம் மீளளிக்கப்படக்கூடிய ரொக்கப் பணமாகவும், மீளளிக்கப்படாத படிவத்தின் பெறுமதியான ரூபா 25/- ஐயும் செலுத்தி 24-4-1980 வியாழக்கிழமை பி. ப 2-00 மணி வரை கிராமசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதான படிவத்தில் இரட்டைப் பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கடை வழங்குதல், மாதாந்த வாடகைக்கு மேலாகக் கடையைப் பெறுவதற்காக கேட்கப்படும் ... உரிமைப்பணம் ... அறவிடப்படும். இப்பணம் திருப்பிக்கொடுக்கப்பட மாட்டாது. முதல் கூடிய ஏழு கேள்விகளும் வரிசைக்கிரமப்படி ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர்கள் அதேவரிசைக்கிரமப்படி கடைகளைத் தெரிவுசெய்து எடுக்க அனுமதிக்கப்படுவர். நல்லூர் கிராமசபை எல்லைக்குள் வசிக்கும் கேள்விக்காரர்களுக்கு சபையின் வருமானம் பாதிக்கப்படாத வகையில் முன்னுரிமை வழங்கப்படும். யாதொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியையோ அல்லது எதனையுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை விசேட ஆணையாளருக்கே உரியது.

ஏனைய விபரங்களை அலுவலக நேரங்களில் இக்கிராமசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
நல்லூர் கிராமப் பிரதேசம்.

நல்லூர் கிராமசபை
அலுவலகம்,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
04-04-1980.

# ஒரு மூதாட்டிக்கு ஏற்பட்ட அனுபவம்

(மன்னார்)

இந்தியாவிற்குச் செல்வதற்காக மலையகத்திலிருந்து தலைமன்னாருக்கு ரயிலில் பிரயாணத்தை மேற்கொண்ட வயோதிப மாது ஒருவர் பொல்காவலை ரயில் நிலையத்தில் வைத்து திருடர்களின் அட்டகாசத்திற்குள்ளாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மலையகத்தைச் சேர்ந்த பெருமாயி (68வயது) என்பவர் இந்தியாவுக்குச் செல்லும் நோக்

(6-ம் பக்கம் பார்க்க)

# உடுப்பிட்டிக் கிராமசபையின் மின் பாவனையாளருக்கு முக்கியஅறிவித்தல்

மின்சாரப் பற்றுக்குறை நாட்டில் ஏற்பட்டதைத் தொடர்ந்து மின்சாரப் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு தங்களை வேண்டுமாறு மின்சாரசபைத் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளமைக்கு இணங்க உடுப்பிட்டிக் கிராமசபை எல்லைக்குள் சபையினால் மின்சாரம்பெறும் சகல பாவனையாளர்களையும் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைக் கடைப்பிடித்து எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. தங்கள் பாவனைக்குட்பட்ட உள்ளக, வெளியக மின்குமிழ்களின் பாவனையை தேவையில்லாத நேரங்களில் நிறுத்துதல்
2. மின்சார இயந்திரங்கள் உபகரணங்கள் முதலியவற்றின் பாவனையை நாளாந்தம் பி. ப. 6-30 மணி தொடக்கம் பிற்பகல் 8-30 மணி வரை தவிர்த்தல்.
3. கைத்தொழில் சம்பந்தமாக பாவிக்கப்படும் மோட்டர்களின் பாவனையைக் கட்டுப்படுத்தல்.
4. மின்சாரவிசிறிகள் காற்று மிதப்படுத்தும் சாதனங்கள் போன்றவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்தல்
5. 31-01-1978ந் திகதிக்குப் பின்னர் வீட்டு மின்பாவனையாளரால் பாவித்த 50க்கு மேற்பட்ட மின் அலகுகள் ஒவ்வொன்றிற்கும் -/50 சதத்திற்குக் குறையாமல் மின்கட்டணம் அதிகரிப்பதுடன், தொழில் ஸ்தாபனம் உட்பட மற்றைய எல்லாவிதமான மின்பாவனைக்கும் சாதாரணமாக பாவிக்கப்பட்ட நுகர்ச்சியிலும்பார்க்க -/75 சதத்திற்கு மேற்பட்ட ஒவ்வொரு மின் அலகுகளுக்கும் ரூ. 1-42 சதத்திற்குக் குறையாமல் அதிகரிக்கப்படும் என்பதையும் முன்கூட்டியே அறிவித்துக்கொள்கிறேன் இவ்வதிகரிப்பு பிரதான மின்சாரப் பரிசோதகரின் அனுமதி கிடைத்ததும் அமுல்நடத்தப்படும்,

மு. தம்பிமுத்து
விசேட ஆணையாளர்.
உடுப்பிட்டி கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
உடுப்பிட்டி கிராமசபை,
1980-03-28.

5411

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஜப்பானில் இருந்து புதிதாக் கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட நல்ல நிலையிலுள்ள ஹொண்டா (Honda) CB 350 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சாந்தி ரயர் வேக்ஸ்' 218/2, புனித்வரர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8085. (5418)

HONDA C D 125 - 80 ஸ்ரீ தொடர்பிலக்கம் விற்பனைக்கு உண்டு கிழமை நாட்களில் 9 - 12 மணி வரையிலும், சனி - ஞாயிறு தினங்களில் 2 - 6 வரையிலும் பார்வையிடலாம். 13, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம். 5406

காட்சியறை நிலையிலுள்ள 34ஸ்ரீ தொடர் இலக்கம் கொண்ட டோயோட்டோ ஹைஏஸ் (TOYOTO HIACE) வேன் விற்பனைக்குண்டு. 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 5415

### தேவை

சுன்னாகத் தொழிற்சாலையில் வேலை பழகுவதற்கு 1? வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் உடனே தேவை நாளொன்றிற்கு 8 ரூபா 50 சதம் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 5399

பட்டி வேர் தொகையாக கொள்முதல் செய்கிறோம். நல்ல விலை தரலாம் P. M. நாகரட்னம் செட்டியார் 15/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 5398

பிடவை வியாபாரம் செய்யக்கூடிய பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். த சங்கரப்பிள்ளை, 21, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 5406

பாதுகாப்புச் சேவைக்குப் பாதுகாவலர்கள் தேவை. நாள் ஒன்றுக்குப் 12 ரூபா சம்பளம். காலம் 8ம், 9ம் திகதிகளில் நேர்முகப்பரீட்சை நடைபெறும். கோம்கவீற் கோம், கொக்குவில்கிழக்கு, நந்தாவில் அம்மன்கோவில் முன்பாக, உடையார்ஒழுங்கை முதல் வீடு. 5411

முதலாம் ஆண்டு
நினைவு அஞ்சலி

ராதிகா - குருசிங்கம்

தோற்றம்: 18-1-76
மறைவு: 3-4-79

எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அருமை ராத்திக்குட்டியே, நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தும் தங்கள் நினைவு எம்மைவிட்டு என்றென்றும் அகலாது தங்களின்ஆத்மா சாந்தியடைய 7-4-80 அன்றுவரும் திதியில் அப்பா, அம்மா, அக்கா, அப்பர் அண்ணா, வாசக்கா, வானக்கா, ராஜன், ஆச்சி அம்மா, தாத்தா, மற்றும் மாமா வீட்டார் ஆகியோர் இறைவனை வேண்டுகின்றோம்-

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

5393

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எவன் இன்று செய்பாமை பயில்கின்றனோ அவன் அவசியமாக விநயமுள்ளவனாயிருக்க வேண்டும்.

—சுவாமி சிவானந்தர்

### மக்கள் கருத்து

## இப்பகுதிமக்களின் குடிநீர்ப் பிரச்னை தீருமா ?

கரவெட்டி அத்துளு குளாய் நீர்த்திட்டத்தின் மூலம் குடிநீரைப்பெற்று வந்தகரவெட்டி கிழக்கு வளர்மதி சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் வசிக்கும் மக்கள். வளர்மதி சனசமூக நிலையத்துக்கு அருகாமையில் உள்ள நீர்க்குழாய் உடைந்து காணப்படுவதால் குடிநீரைப்பெற முடியாது மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அத்துடன் இப்பகுதியில் உள்ள கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களும் இக்குழாய் திருத்தப்படாததால் குடிநீரைப் பெறுவதற்கு ஒரு மைல் தூரத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே இக்குழாயை திருத்துவதற்கு இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

த. தங்கத்துரை
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

## அநுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் ஆலயம்

அநுராதபுரம் இலங்கையின் புராதன தலைநகரங்களில் ஒன்றாகும். சோழர்களின் படையெடுப்புக்குப்பின்னர், அதன் புகழ் மங்கி, காலக் கிரமத்தில் காடாகியது. ஆங்கிலேயரின் ஆட்சியில் குளங்கள் புதுப்பிக்கப்பெற்ற பின்னர் மக்கள் அநுராதபுரத்தில் குடியேறி, காட்டை வெளியாக்கி, களனியாக்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அநுராதபுரத்தில் கணிசமான தொகையினர் தமிழர்களாக இருந்தனர் அவர்களின் வழிபாட்டுக்கென அமைந்த ஆலயமே ஸ்ரீ கதிரேசன் ஆலயமாகும்.

அநுராதபுரம் பழைய நகரத்திலுள்ள 'ஓட்டுப்பள்ளம்' என்ற இடத்திலேதான் ஸ்ரீ கதிரேசன் ஆலயம் முதன் முதலாக அமைக்கப்பெற்றது. நாடோடியாகத் திரிந்த தென்னிந்தியத் துறவியொருவர் தான் வைத்திருந்த வேலை ஸ்தாபித்து வழிபட காலக்கிரமத்தில் ஆலயமாகியது. ஓட்டுப்பள்ளத்தில் மேற்படி ஆலயத்தை வைத்திருப்பதில் பல பிரச்னைகளிருந்தபடியால் 1931-ம் ஆண்டில் 'மாவடி' என்னும் இடத்தில் சைவாகம முறைப்படி இந்த ஆலயம் ஸ்தாபிக்கப் பெற்று குடமுழுக்காற்றப்பெற்றது. அதன்பின் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்கட்கு கதிரேசன் ஆலயம் வழிபடு ஸ்தலமாயிற்று.

அரசினரின் கொள்கைகட்கேற்ப புனிதநகர் புனரமைப்புத் திட்டத்தினால் ஸ்ரீ கதிரேசன் ஆலயம் பழைய நகரிலிருந்து புதிய நகரில் 1962-ம் ஆண்டளவில் புதிதாக நிர்மாணிக்கப்பெற்று,1964-ம்ஆண்டு செப்டம்பர் 9 ம் திகதியன்று குடமுழுக்காற்றப்பெற்றது. இந்த ஆலயம் பண்டார நாயக்க வீதியில் ஜெயந்தி மாவத்தை சந்திக்குமிடத்தில் அழகுற அமைந்து விளங்குகின்றது. ஆலயத்தின் அர்ச்சகராக தொடர்ந்து முப்பத்தைந்து ஆண்டுகளாக சிவஸ்ரீ பொ. இ. நடராசக்குருக்கள் கடமையாற்றுகின்றார்.

சென்ற 1977-ம் ஆண்டு அமளியால் பாதிப்புக்குள்ளான ஸ்ரீ கதிரேசன் ஆலயம் தற்சமயம் பாலஸ்தாபனம் செய்யப்பெற்றுள்ளது. ஆலய மூலஸ்தான விமானம், பரிவார கோயில்கள், அர்த்த, நிருத்த மண்டபங்கள் புதிதாக வர்ணம் பூசப்பெற்று அழகுடன் மிளிர்கின்றது. அமளியில் காணாமற்போன சிவகாமசுந்தரி செப்பு திருவுருவம் புதிதாக வார்க்க வேண்டியுளது. கும்பாபிஷேகத்தை எதிர்வரும் ரௌத்திரி ஆண்டு சித்திரைத் திங்கள் 16-ம் நாள் (28-4-80) காலை 9-01 மணியளவில் வரும் சுபவேளையில் நடாத்த அநுராதபுரம் ஸ்ரீ கதிரேசன ஆலய பரிபாலன சபையினர் தீர்மானித்துச் செயல்பெறுகின்றனர். கும்பாபிஷேகத்தை திறம்பட நடாத்த பொது மக்களின் மேலான பொருளுதவியைக் கோருகின்றனர்

ம. கணேசமூர்த்தி
196, பண்டாரநாயக்க மாவத்தை,
அநுராதபுரம்.

“மன்னார் மாவட்டத்துக்கு

# தொழில்நுட்பப் பாடசாலை: கல்வி அலுவலகம் வேண்டும்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திற்கு தொழில் பாடசாலை ஒன்றை அமைத்துத்தருமாறும், மன்னார் கல்வி அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்துத் தருமாறும் கோரும் தீர்மானங்கள் மன்னார் அல்-அஸ்ஹர் மக வித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கை இஸ்லாமிய ஆசிரியா சங்கத்தின் மன்னார் கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் மன்னார் பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். சரீ, கல்வி அதிகாரி திரு. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து உரையாற்றினர்.

கல்வியில் பின்தங்கிய நிலையில் உள்ள மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லிம் மாணவர்களைக் கூடுதலாக பல்கலைக் கழகத்தில் சகல பிரிவுகளுக்கும் தெரிவு செய்யக்கோருதல், மன்னார் மாவட்டத்தில் இஸ்லாமிய கலாச்சாரத்திற்கு பட்ட ஒரு பாடசாலையில் புதிய கல்வி ஆராய்ச்சி நிலையமொன்றை நிறுவவேண்டுதல் உட்படப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியா சங்கத்தின் மன்னார் கிளையின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஜனாப் எம். கே. எச். முகம்மது, உபதலைவர்கள்: ஜனாப் ஏ. ஹக். ஜனாப் ஏ. யூ. எம். சரீப், செயலாளர்: ஜனாப் ஏ. சி ஏ. குமான், துணைச் செயலாளர்: ஜனாப் ஏ தாவுத், பொருளாளர்: ஜனாப் எம். றகுமதுல்லா. (ச)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

(அரியாலை)

கிறிஸ்தவ சேவா ஆசிரியர் சகாய நிதிச் சங்கத்தின் 25வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை சங்கப் பணிமனையில் சபையின் தலைவர் திரு. த. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். (கு)

மட்டு. மாவட்டப் பாடசாலைகள்

## குறைபாடுகளை நீக்க பிரதி அமைச்சரிடம் கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கும்படி மட்டக்களப்பிற்கு விஜயம்செய்த பிரதி கல்விமந்திரி திரு. சமரவீர வன்னியாராச்சியிடம் பட்டிருப்பு எம். பி. திரு பூ. கணேசலிங்கம் மட்டக்களப்பு கச்சேரியில் நடந்த ஒரு மகாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட மந்திரி திரு எம். கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில்

திரு. கணேசலிங்கம் தொடர்ந்து பேசுகையில், மட்டக்களப்புப்பகுதி புயலால் பாதிக்கப்பட்டுள்ளது. பாடசாலைப் புனரமைப்புவேலைகள் ஒழுங்காக நடைபெறவில்லை. கட்டிட வேலைகள் ஒன்றும் இதுவரை முடியவில்லை. பாடசாலை வசதியின்றி மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள் தளபாட வசதிகள் இல்லை. ஆசிரியர்கள் பற்றாக்குறை இன்னும் தீரவில்லை. மட்டக்களப்பு மாவட்டப்பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இவரைப்போல் மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனாப் பரீத் மீராலெப்பையும் பாடசாலைகுறைபாடுகளைச்சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்து அமைச்

[4-ம் பக்கம் பார்க்க]

## பங்குனித்திங்கள் தனில் பத்தினி உன் சந்நிதியில்

பல்லவி

சிலம் பொலி கேட்குதம்மா திங்களில்
சிந்தை குளிருதம்மா பொற்பதச் — (சி)

அநுபல்லவி

குலம் சிறந்தோங்கியே குலமகள் மகிழ்வுற
நலம் தருநாயகியே நற்கற்புக் கரசியே உன் (சி)

சரணம்

வலம் வந்து வணங்கியே வற்றாப்பளை தனில்
புலம்பிடும் பூவையர்தம் புன்மை தனைக்களைந்து
தலம் தொறும் தண்ணொளியைத் தந்தருள் புரிந்திடும்
தர்ப்பரியே அற்புதச் சிலம்புடை கண்ணகியே—(சி)

-- சிவநேசன் வே. கந்தையா

## தடைப்பட்ட திருவிழாக்களை நடத்த முடிவு!

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற போது, கடந்த மூன்று ஆண்டு காலமாகத் தடைப்பட்டிருந்த 4-ம், 5-ம், 7-ம், 8-ம் திருவிழாக்களை இவ்வருடம் செய்வதற்கு அனுமதியளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. திரு. நா. அமிர்தராசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சகல திருவிழா உபயகாரர்களும் கலந்து கொண்டனர். இதுவரை காலமும் ஒரு சாராருக்கு மறுக்கப்பட்ட சகல உரிமைகளையும் வழங்குவது என்றும், தூய்மையுடன் வருபவர்கள் எவரும் சுவாமி காவலாம் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கோவிலின் 11 திருவிழா உபயகாரர்களையும் பிரதிநிதிப்படுத்தும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட திருவிழா ஆலோசனைச் சபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

# ரௌத்திரிவருட இராசிப்பலன்

எதிர்வரும் 13-4-80 ஞாயிற்றுக்கிழமை சித்திரைப் புத்தாண்டின் இராசிபலன் வருமாறு:

### மேடம்

தேச்சு வன்மையால் பெரியவர்களுடைய ஆதரவைப்பெறுவீர்கள். காதல்உலகில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும். குடும்பத்தில் அமைதி நிலவும். களஸ்திரவழியால் நன்மைகள் வந்துசேரும். கல்வித்துறையில் களிப்புமிகுதியும் உண்டு. கலைஞர்கள் உலகில் போற்றப்படுவர். உத்தியோகத்தர்களுக்கு உயர்வு உண்டு. வணிகர்கள் வாழ்வில் வளமான திருப்பம் ஏற்படும். விவசாயிகளுக்கு இவ்வாண்டு சிறப்பான ஆண்டாகும்.

### இடபம்

தனக்குறைவு, தானிய நஷ்டம், பொன்பொருள் விரயம், குடும்பக்கவலை, குருதொழில் பீடை, கல்விக்குழப்பம், கடுஞ்சாற்கேட்க நேரிடும். சகோதரவழிமூலம் சிக்கல்கள் தோன்றி மறையும். வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும். விவசாயிகளுக்கு ஏமாற்றத்திற்கு இடமுண்டு சிலர்வாழ்க்கையில் குடும்பப் பிரச்சினைகளுக்கும் இடமுண்டு புதிய முதலீடுகளை இவ்வாண்டு தவிர்ப்பது நல்லது.

### மிதுனம்

...ஒரு பணம், மக்களின்சோர்வு, மனைவியின் துன்பம், திட்டமிடுவதால்கஷ்டங்கள் நீங்கும். மாடு, கன்று, வாகனம் இவைகளால் நன்மையுண்டு. விவசாயிகளுக்கு நீர்த்தொழில்விருத்தியும் உண்டு கல்வியில் கணிசமான முன்னேற்றமுண்டு. வணிகர்கள் வாழ்வில் புதியதிருப்பத்திற்கிடமுண்டு

### கடகம்

தேடிய இன்பம் காலடியில் கிடைக்கும், கலைஞர்கள் பெரும்புகழ்அடைவர். சேரும் குடும்பம் சிறப்பாகவாழும். கல்வித்துறையில் கனிவான முன்னேற்றம். வியாபாரத்துறையில் விருத்திகாணும், நீண்ட நாள் எதிர்பார்த்த நிதிவசதி இவ்வாண்டில் கிடைக்கும். புதுத்தொழில்நாட்டம் வெளியிடத்தொடர்பால் முன்னேற்றம் உண்டு. விடாமுயற்சியால் விவசாயிகளுக்கு நன்று பூமியாம் இலாபம், பொதுப்பணியில் ஆர்வம்.

### சிங்கம்

வாழ்க்கை சிலந்திவலையாகக் காணப்படும். நிதானபுத்தியுடன் நடந்துகொண்டால் சிக்கல் தீரும். உத்தியோகக்கவலை, உடல்நலக்கவலை, சட்டம் தவறுதல், எதிர்பாராத இடமாற்றம், பணவிடயத்தில்புதிய பிணக்குகள் தோன்றும். கல்வி பயில்வோர் கவனம்செலுத்திக் கொள்ளவும், வணிகர்களாயின் இவ்வாண்டு அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்வது நன்று.

### கன்னி

பாக்கியநலன் மிகவுண்டு. நோக்கிய கருமங்கள் நன்று நோய், பிணி தீரும். நேர்மைக்கு உதவியுண்டு பொது மக்களிடத்தில் செல்வாக்குப் பெருகும். அன்னியர் உதவியும், உறவினர் நலனும் எளிதில் கிடைக்கும். பணிவி மக்கள் நன்மை பயப்பார்கள் கன்னியர் உறவுகளிருப்பின் சுகமாக முடிவடையும். தெய்வ அருளுமுண்டு. வழிபட்டால் நன்று உற்சாகமூட்டும் வருடமாகும்.

### துலாம்

எதிரியால் கவலை, ஆயுத பயம், தன்னிலை மாற்றம், தாமதபுத்தி, வாகனக்கஷ்டம், வரவில்மிஞ்சிய செலவு, மாதர்களுக்கு மந்தித்தநோய் கல்வி பயில்வோருக்கு சமமான பலன். வணிகர்கள் அதிகமுதலீட்டைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்கள் இவ்வாண்டு நிதானபுத்தியுடன் நடந்து கொள்ளவும். கூட்டுமுயற்சி விரும்பத்தக்கதல்ல. குடும்ப வாழ்க்கையில் பொறுமை தேவை.

### விருச்சிகம்

கன்னியர் உறவு, எண்ணிய கருமம் எளிதில்கைகூடும் சுயதொழில் புரிவோர்க்கு தன விருத்தியுண்டு. விவசாயத் துறையில் இன்பமுண்டு. பொதுப்பணியில் ஆர்வம் இயக்குநர்களாயின் சிறப்படைவர் கல்வி பயில்வோருக்கு கணிசமான முன்னேற்றம். தொழில்உயர்வை வஞ்சகர் தடுப்பினும் பெரியோர் உறவால் தடைகள் நீங்கும்.

[4-ம் பக்கம் பார்க்க]

சோதிடக் கலாநிதி க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி. மு. க. தேர்தல்அறிக்கையில்

# மாநிலசுயாட்சிக் கோரிக்கை வலியுறுத்தப்படும்

## கருணாநிதி தகவல்

சென்னை ஏப் 6
தமிழக சட்டசபைத் தேர்தலில் இந்திராகாங்கிரஸ் கட்சியுடன் கூட்டாகப் போட்டியிட்டாலும் தி மு கவின் தேர்தல் அறிக்கையில் மொழிப் பிரச்சினையும் மாநில சுயாட்சிக் கோரிக்கையும் வலியுறுத்தப்படும்.

இவ்வாறு தி. மு க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்

தி மு க --இந்திரா காங்கிரஸ் கூட்டணி குறைந்தபட்ச செயல்திட்ட அடிப்படையிலேயே தேர்தலில் போட்டியிடுகிறது என்றும் இக்கூட்டணிக் கட்சிகளுக்கிடையேயான தொகுதி உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தைகள் எதிர் வரும் திங்களன்று ஆரம்பமாகும் என்றும் திரு. கருணாநிதி கூறினர். (இ)

---

## நெஞ்சை உருக்கும் ஒரு சோக சம்பவம்

(கொழும்பு)

சகமாணவியை சைக்கிள் பாரில் ஏற்றிக்கொண்டு வேகமாகச் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவி ஒருவர் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதால் தனது பாடசாலை தோழியை ஸ்தலத்திலேயே பலிகொடுத்தார்.

வெலிக்கந்தபல்லம என்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

பொ. கபாக்கவனக்குறைவாக சைக்கிளைச் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டின்பேரில் சைக்கிளைச்செலுத்தியமாணவி பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். [லெ]

---

## சரண்சிங் - ராஜ்நாராயண் கடும் போட்டி:

# மக்கள் கட்சிக் காரியாலயம் யாருக்குச் சொந்தமானது?

புதுடில்லி, ஏப். 6
இந்திய மக்கள் கட்சியின் தலைமைக் காரியாலயக் கட்டிடத்தைக் கைப்பற்றிய பொலிசார் அங்கு தொடர்ந்துகாவல் புரிந்துவருகின்றனர்.

அண்மையில் கட்சியில் ஏற்பட்ட இழுபறியைத் தொடர்ந்து திரு சரண்சிங்கும், திரு. ராஜ்நாரயணும் பொலிசாரிடம் முறையிட்டதையடுத்தே பொலிசார் கட்டிடத்தைக் காவல் புரிந்துவருகின்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருதலைவர்களுமே தலைமைக் காரியாலயம் தமக்கே சொந்தமானது என்று உரிமைபாராட்டுவதைத் தொடர்ந்து ஏற்பட்ட சச்சரவைத் தொடர்ந்து இருதலைவர்களும் நேற்று பொலிசாரிடம் முறையிட்டுள்ளனர்.

மக்கள் கட்சியின் நிர்வாகத் தலைவர் திரு. ராஜ்நாராயணை கட்சித் தலைவர் திரு. சரண்சிங் கட்சியிலிருந்துவெளியேற்றிய அதேவேளையில் நிர்வாகத்தலைவரான திரு. நாராயண் கட்சியையே சுலைத்திருந்தது தெரிந்ததே (கு)

---

## எந்தக்கட்சியுடனும் தாம் சேரப்போவதில்லையாம்

### ஆதரவாளர்களிடம் ஜெகஜீவன்ராம் உறுதி

புதுடில்லி, ஏப். 0
ஜனதாக் கட்சியிலிருந்து வெளியேறிய முன்னள் துணைப் பிரதமர் திரு. ஜெகஜீவன்ராம் தாம் எந்தக்கட்சியிலும் சேரப் போவதில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்

திரு. ஜெகஜீவன்ராம் தமது 73வது பிறந்தநாள் விழாவிற்கு வாழ்த்துத்தெரிவிக்க வந்திருந்த ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

இன்றைய அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டிப்பதற்கு சகல கட்சிகளும் ஒன்றோடொன்று ஒத்துழைக்கவேண்டியது அவசியம் என்றும் திரு. ராம் வலியுறுத்தினர். (கு)

---

## "ஆப்கான் பிரச்னை: அணிசேரா நாடுகள் ஆலோசனை நடத்தவேண்டும்"

### எகிப்திய துணை அமைச்சர் கருத்து

கெய்ரோ, ஏப் 6
"ஆப்கானிஸ்தான் பிரச்னை தொடர்பாக ஆராய்வதற்காக அணிசேரா நாடுகள் கூட்டம் ஒன்றினை நடாத்தி ஆலோசனை நடாத்தவேண்டும்"

இவ்வாறு எகிப்திய துணை அமைச்சர் திரு. புட்டோஸ் ஹாரி கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் நிலைமை தொடர்பாக எகிப்திய அதிபரின் கருத்தைத் தெரிவிக்குமுகமாக ஓமான், இந்தியா, நேபாளம் ஆகியநாடுகளுக்கு விஜயம் செய்திருந்த திரு ஹாரி நாடு திரும்பியபின்னர் நடாத்திய பத்திரிகை நிருபர்கள் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு கருத்துவெளியிட்டார்.

ஆப்கான் பிரச்னைபற்றி அணிசேரா நாடுகள் பொதுவான கருத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் திரு ஹாரி கூறினர். (கு)

---

## ஜனதாகட்சிக்குள் மற்றுமொரு பிளவு

### வாஜ்பாய் தலைமையில் புதிய கட்சி?

புதுடில்லி, ஏப் 9
ஜனதா கட்சியில் உள்ள முன்னள் ஜனசங் உறுப்பினர்கள் புதிய கட்சி அமைக்கத் தீர்மானித்துள்ளனர்.

முன்னள் அமைச்சர் திரு. எல் கே அத்வானியை அமைப்பாளராகக்கொண்ட கட்சிக்கான பெயர், கொடி, சின்னம் அமைப்பு விதிகளை உருவாக்குவதற்கு குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

முன்னள் அமைச்சர் திரு. ஏ பி வாஜ்பாய் இக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு கேட்கப்பட்டுள்ளார். (இ)

---

## குறைபாடுகளை....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சர் பேசுகையில்: பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் நீக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதாகத் தெரிவித்தார்.

---

## ஈரான் பாராளுமன்ற

# இரண்டாம் கட்டதேர்தல் இம்மாத இறுதியில் நடக்கும்

தெஹ்ரான், ஏப்.6
ஈரானிய பாராளுமன்றத்துக்கான இரண்டாம் கட்டத் தேர்தல்கள் இம்மாத இறுதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

கடந்த மாதம் நடைபெற்ற முதலாம் கட்டத்தேர்தல் முடிவுகள் நேற்றுக் காலையே உத்தியோகபூர்வமாக வெளியிடப் பட்டன.

முதல்கட்டத் தேர்தலில் 99 உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவற்றில் மதத் தலைவர்களின் செல்வாக்கைப் பெற்றிருக்கும் இஸ்லாமியக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே பெரும்பாலானவர்களாவர்.

முதற்கட்டத்தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் 50 சதவீத வாக்குகளைப்பெறத் தவறிய தொகுதிகளுக்கே இரண்டாம் கட்டத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

மொத்தம் 270 ஸ்தானங்களைக் கொண்ட பாராளுமன்றத்தின் மிகுதி 171 தொகுதிகளுக்குமான இரண்டாம்கட்டத்தேர்தல் இம்மாத இறுதியில் நடைபெறும். (கு)

---

## "ஜமாஅத்துக்கான ஒழுக்க விதிகள் வகுக்கப்பட்டுள்ளன"

(யாழ்ப்பாணம்)

'இஸ்லாமியநெறிமுறைகளை முஸ்லிம்கள் ஒழுகி நடப்பதற்கான ஒழுக்க விதிகள் அடங்கிய அமைப்பினை கதிப்மார் சம்மேளனம் உருவாக்கியுள்ளது. ஜமா அத்தில் அடங்கும் குடும்ப விவகாரங்களை உள்ளடக்கிய இக்கோவையின் மறுபக்கத்தில் ஒழுக்க விதிகளும் காணப்படுகின்றன. இதனை ஜமா அத்தவர்கள் பூர்த்தி செய்வதன் மூலம், பரிபாலகர்களும் ஜமாஅத்தவர்களும் கூட்டாகச் செயல்படக்கூடிய நிலை உருவாகும். இதனை நிறைவேற்றுவதற்கு முஸ்லிம்கள் முன்னின்று ஒத்துழைப்பு நல்க வேண்டும்.''

இவ்வாறு வட்டக்கச்சி ஜும்மா மஸ்ஜிதில் நடைபெற்ற விசேஷ கூட்டம் ஒன்றுக்குத் தலைமைதாங்கி உரைநிகழ்த்திய அகில இலங்கை கதீப்மார் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி கே. எம். எச். காலிதீன் குறிப்பிட்டார்.

பள்ளிவாசலில் குத்பா பிரசங்கத்தைநிகழ்த்திய மௌலவி காலிதீன், புதிய பரிபாலன சபைத் தெரிவுக்கான கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

தொடர்ந்து உரைநிகழ்த்திய அவர், உலகத்தில் இறைவன் மிக விரும்புவது பள்ஜித்களையே. இதனைப் பராமரிக்கும் நிருவாகிகள் இறைபக்தர்களாகவும், மறுநாளில் விசுவாசம் உடையவர்களாகவும் தொழுகை, ஸகாத் ஆகியவற்றைப் பேணுபவர்களாகவும், அல்லாவுக்கு மட்டுமே அஞ்சுபவர்களாகவும் இருக்க வேண்டும். இஸ்லாமிய நெறி முறைகளைக் கைக்கொள்வதற்கு முஸ்லிம்கள் ஆயத்தமாக உள்ளனர் என்றும் கூறினர். (கொ-)

---

## ரௌத்திரிவருடஇராசி..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிவாதத்தன்மை பெருமையும் சேரும்.

### தனுசு

புண்ணியவிருப்பு, பொன் பொருள்சிறப்பு, நீர்த்தொழில் விருத்தி, நினைத்தது வெற்றி, வியாபாரத்துறையில் அதிக பயனுண்டு. கனவியர் வாழ்வில் களிப்புமிகுதியும் கல்வி பயில்வோருக்கு சிறப்பான வெற்றியுமுண்டு. உத்தியோகத்தர்கள் உயர்ச்சியடைவர். இல்லச் சிறப்புமுண்டு. இடப்பிரிவும் ஏற்படலாம்.

### மகரம்

விவசாயிகளுக்கு அதிகமுன்னேற்றம் உண்டு. வாகனச் சொந்தக்காரர் ஆதாயம்பெறுவர் மேலதிகாரிகளின் ஆதரவுக்கு இடமுண்டு எதிர்பாராத பொருள் வரவுண்டு கல்வித்துறையில் உற்சாகம் பிரச்சினை ... குப் ... ... ... ... நிம்மதி ... ... ... குழப்பம், இராசகவலை, இடர் பல வரும் தொழில்துறையில் எதிர்பாராத இடமாற்றமும் ஏற்படலாம் மேலதிகாரிகளின் நிலையில் மந்தநிலை ஏற்படும் பணவிடயத்தில் நிதானபுத்தியுடன் நடந்துகொள்ளவும். கல்விகற்போர் கவனம் செலுத்தவும். மக்களின்சோர்வு, மனைவியின் துன்பம் திட்டமிடுவதால் நஷ்டங்கள் நிலைக்கும். வணிகர்கள் வாழ்விலும் மந்தநிலைகாணும். உத்தியோகத்தர்களாயின் திடீரென இடமாற்றத்திற்கு ஆளாகலாம். பொறுமை அவசியம்.

### கும்பம்

சிந்தனைக் ...

### மீனம்

தொழில்துறையில் மாற்றம் ஏற்படலாம். வியாபாரத் துறையில் தொல்லைகள்தோன்றலாம் குடும்பவாழ்க்கையிலும்சாதாரண பலன்கள்தென்படும் சகிப்புத்தன்மையும் பொறுமையும் வேண்டும். முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தென்படும். கொடுத்த வாக்கை காப்பாற்றமுடியாமல் திண்டாடுவீர்கள் கல்வியில் மந்தநிலை தென்படும். கனவியர் உள்ளத்தில் கவலைதோன்றும் எண்ணத்தில் நிதானம் வேண்டும் வாகனம்செலுத்துவோருக்கு அவதானம் வேண்டும்.

---

## "எகிப்திய அதிபர் சதாத்தை

# பதவியிலிருந்து கவிழ்க்க மக்கள் முன்வரவேண்டும்"

### ஈரான் ஜனதிபதி வேண்டுகோள்

தெஹ்ரான், ஏப். 6
எகிப்திய அதிபர் சதாத்தை பதவியிலிருந்து கவிழ்த்துவிட்டு ஈரானிய ஷாவை ஈரானுக்கு அனுப்பிவைக்க எகிப்திய மக்கள் முன்வரவேண்டும் என்று ஈரான் ஜனதிபதி ஜனுபானி சதர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈரானிய வானொலிக்களித்த பேட்டியொன்றில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்த ஜனுப் சதர், ஈரானிய ஷாவுக்கு எகிப்து புகலிடமளித்ததை வன்மையாகக் கண்டித்தார்.

ஷா மீது ஈரான் ... குற்றச்சாட்டுகளை விசாரிக்க விசாரணை ... யொன்றை உடனடியாக நியமிக்குமாறு ஈரான் அமெரிக்காவைக்கேட்கவிருக்கிறது அமெரிக்காவும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ... (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ்-சௌகார்ஜானகி
**நீர்க்குமிழி**
(புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
ரங்கராவ் - சுந்தரராஜன்
**அன்புச் சகோதரர்கள்**
(புதிய பிரதி)

—LAST FEW DAYS ONLY—
**SANTHI** JAFFNA — Phone: 7642.
Daily 10-30 a m, 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
**"SPECIAL DELIVERY"**
ADULTS! ACTION PACKED!! COLOR!!!
Await! "DIAMOND'S"—in color

4th CROWDED WEEK
**REGAL** JAFFNA Phone 380
Daily 4 shous
Daily at 8 m. 2-00, 4-30, 7-00 & 9-30 p m
ROGER MOORE as JAMES BOND
**LIVE AND LET DIE**
(More suited for Adults)

**ராஜா** - (யாழ்நகர்) கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

**வின்ஸர்** தொலைபேசி 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி; 10-30, 1-30, 4-30, 7.15, 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
**நிறம் மாறுத பூக்கள்**
(வண்ணப்படம்)

**ஸ்ரீதர்** 10-4-80 வரை மட்டும்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா, சுந்தரராஜன்
நடித்த
**திருடன்** (புதிய பிரதி)
11-4-80 முதல் புத்தாண்டு வெளியீடு
**இரத்தத்தின் இரத்தமே** (ஈஸ்ட்மன் கலர்)

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-எல். விஜயலட்சுமி
**வல்லவன் ஒருவன்** (புதிய பிரதி)

**வெலிங்டன்** Daily 10-30 a. m., 2-15, 4-45, 7-00, & 9-30 p m.
[யாழ்ப்பாணம்]
**Horror of Frankenstein**
[Strictly for Adults]

**லிடோ** தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
(யாழ்நகர்) போன்: 1898
**சுபதினம்**


# இன்றைய பலன்

பங்குனி மாதம் 25-ம்திகதி
(7-4-80)
திங்கட்கிழமை

**மேடம்:** கனிவான சம்பவங்கள் இடம்பெறும் அபிப்பிராய பேதங்கள் மறைந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர் குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும் தொழில் புரியும் இடத்தில் நல்ல மாற்றங்கள் உண்டு.

**இடபம்:** சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும் செய்தொழிலில் நஷ்டம் ஏற்படலாம் புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று சிலருக்கு நூதன ரோகம் அதன்படலாம் சுகாதாரப வேண்டும.

**மிதுனம்:** சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுவீர்கள் காதல் திருந்த கண்களுக்கு களிப்பூட்டும விருந்தொன்று கிடைக்கும் மகிழ்ச்சிகரமான தினம்

**கடகம்:** போட்டி விவகாரங்களில் பணம் விரயமாகும் ஆணவப் போக்கினுல் சந்தர்ப்பம் நழுவவிடப்படலாம் எதிரிகள்மறைமுகத்தாக்குதல் நடத்துவர் மேலிடத்து அபிப்பிராய பேதத்துக்கும இடமேற்படும்.

**சிங்கம்:** உறவினர்கள் உதவிக்கு வருவர் வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும் காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும். ததுாகலமான தினம.

**கன்னி:** கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள் ஓவியாகள வாழ்க்கை ஒளிமயமாகும். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம. கலைஞர்களுக்கு நல்ல தினம்.

**துலாம்:** பொதுப்பணிகளில் ஈடுபடவிரும்புவீர்கள் குறிப்பாக அரசியல் வாதிகளுக்கு புதிய ஆர்வம் பிறக்கலாம சிலர் புண்ணிய ஸ்தல யாத்திரையை மேற்கொள்வதற்கும் இடமுண்டு.

**விருச்சிகம்:** வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும் சுற்றுடலின உற்சாகமான வரவேற்புக்கிடைக்கும அதிக வருவாய்க்கு இடமுண்டு கலைஞர்களுக்குப் பொன்னுன தினம்

**தனு:** இனிக்கப் பேசுவோர் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும பிறந்தகத்தின் நலவு நிடீரென்த் தலைதூக்கும் கடமையில் சோர்வு தென்படும் மனத்திடம்வேண்டும

**மகரம்:** பேச்சுவன்மையினுல் பெரும்புகழ்கிடைக்கும பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித் தரும் வரவிலும் உயர்வு காணும் சிலருக்கு அதிஷ்டலாபமும கிடைக்கலாம.

(6-ம் பக்கம் பார்க்க)


**வெஸ்லி**
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
நாகேஷ்
**ஹலோபாட்னர்**
(புதிய பிரதி)


வயாவிளான ச. ச. நிலைய

# கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

(பலாலி)

வயாவிளான் ஞான வைரவர் சன சமூக நிலையம் நடாத்தும் அமரர் செல்லப்பா குமாரசாமி ஞபகார்த்தச் சுற்றுப் கேடயத்திற்கான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. சனசமூக நிலையத்தின் 23-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெறும் இச்சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம், மன்னுர், வவனியா மாவட்டங்களில் இருந்து மொத்தம் 123 கோஷ்டிகள் கலந்து கொள்கின்றன இன்றைய போட்டியை வலி வடக்கு உத்தியோகத்தர் திரு முருகையா ஆரம்பித்து வைப்பார்.

நிலைய மைதானத்தில் நடைபெறும் இப்போட்டிகள் அனைத்தும் நொக் - அவுட் முறையில் நடாத்தப்படும் செற் அப் போட்டி, ஓவர்கேம் 6 வீரர் போட்டி, ஓவர்கேம் 4 வீரர் போட்டி என மூன்று வகைகளாக நடாத்தப்பட்டு சாம்பியன்கள் தெரிவு செய்யப்படும் சுற் போட்டியின் 1-வது சுற்று வட்டத்தில் தினமும் 10க்கு மேற்பட்ட போட்டிகளும், 2-வது 3-வது சுற்றுக்களில் தினமும் 7 போட்டிகள்வீதமும் நடாத்தப்படுகிறது. இறுதிப் போட்டியும பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 22-ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும். தூர இடங்களில் இருந்து வரும் கோஷ்டிகளின் வசதிக்காக ஒரு கோஷ்டி ஒரே நாளில் 5 போட்டிகளில்கலந்துகொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஓவர்-கேம் 6 வீரர்போட்டியில் சாம்பியனைத் தெரிவு செய்யப்படும் கோஷ்டிக்கு அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்தக் கேடயம் வழங்கப்படுவதுடன், தொழிலதிபர் திரு. எஸ். நாகராசா அன்பளிப்பு வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படும். 2ம் இடத்தைப் பெறும் கோஷ்டிக்கு திரு கே அமரசிங்கம் அன்பளிப்பு வெத்

(6-ம் பக்கம் பார்க்க)


**ராணி - யாழ்நகர்** தினசரி 4 காட்சிகள்
✱ ஸ்ரீகாந்த் ✱ மலேசியா சிவாஜி ராஜா ✱ டீன்குமார்
✱ கலைச்செல்வன் ✱ ஜவாஹர் ✱ ஜோபுநவீர்
✱ ரகுநாதன் ✱ பரிமளா ✱ ஹெலன்குமாரி ✱ சந்திரகலா
மற்றும் ஈழத்து நடிகர்கள் பலர் ஒன்றுகூடி நடித்த
**நெஞ்சுக்கு நீதி**
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு


சாவகச்சேரி

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பதாரர்கள் பின்வரும் விதிகளுக்கு அமைவானவர்களாக இருத்தல் வேண்டும்.

அ. வசிப்பிடத்தகைமை:- குறைந்தது கடந்த இரண்டு வருடமாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

ஆ. விண்ணப்பங்கள் மேற்படி சங்கத்தால் வழங்கப்படும் படிவத்தில் தங்கள் சொந்தக் கையெழுத்தில பூர்த்தி செய்து கடித உறையின் இடதுபக்க மேல மூலையில் விண்ணப்பிக்கும் பதவியும் குறிப்பிட்டுத் தலைவர், சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி என்ற விலாசமிட்டு பதிவுத் தபாலில் 23-4-80ல் அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும் (விண்ணப்பப்படிவம் ஒன்றுக்கு -/50 சதம் செலுத்தி நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்)

இ. விண்ணப்பத்துடன் கல்வித்தகைமை, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், வசிப்பிடத்தகைமை, அண்மையில் பெற்ற இருநற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும்

**1. கிராமியவங்கி முகாமையாளர் தரம் 11**

வேதனம் $\dfrac{250\text{-}00 \;-\; 400\text{-}00}{10 \times 10 - 12\ 50 \times 4}$ + படிகளும்

**கல்வித்தகைமை:**

க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் கிராமிய வங்கியலில் இரண்டு வருட கால அனுபவம் அல்லது, க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுப் பயிற்சி சாதாரண தரத்தில் சித்தியுடன் கிராமிய வங்கி நடைமுறையில் 2 வருட அனுபவமும் அல்லது
கணக்கு லிகிதர் 11ல் கிராமிய வங்கி கிளையில் கடமையாற்றிய ஐந்து வருடகால அனுபவமும் பொருந்தியவர்.
வயது: 25க்கு மேல் — 40க்குள்.
பிணை: காசு ரூபா 25000-00
ஆதனம் ரூபா 10,000-00

**2. காவற்காரர்**

வேதனம் $\dfrac{150\text{-}00 \;-\; 212\text{-}00}{5 \times 10,\quad 6 \times 2}$

**கல்வித்தகைமை:**

8-ம் தரம் சித்தி, நல்ல உடல்நலமும் அனுபவமும் இருத்தல் வேண்டும்.
வயது: 18 — 30
பிணை: காசு ரூபா 1000-00
சங்கத்தில் கடமையாற்றும் நிரந்தர ஊழியருக்கு வயதெல்லை நியதியில்லை காசுப்பிணைக்குரிய வங்கி வட்டி வழங்கப்படும். ஆதனப் பிணைக்குப் பதிலாக காப்புறுதி நம்பிக்கை உத்தரவாதமும் செலுத்தலாம்.

தலைவர்,
**சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்.**

3-4-1980 5410

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...

டில்கா வாச் வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் வேல்மாடி -
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

JAFFNA CAMPUS UNIVERSITY OF SRI LANKA LIBRARY PERIODICALS DIVISION RECEIVED 1980-4-7

## பொருட்காட்சிக்கு வந்த உப்பு

[புதுடில்லி]

1930-ல் மகாத்மா காந்தியடிகள் மேற்கொண்ட உப்புச் சத்தியாக்கிரக ஞாபகார்த்த பொன்விழா சம்பந்தமான பொருட்காட்சி நேற்று இங்கு ஆரம்பமானது.

இவ்வரலாற்றுப் புகழ் பெற்ற அந்த உப்பில் ஒரு சிட்டி கை உப்பும், காந்தியடிகளின் கைத் தடியும் பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)
சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.
SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்.
(சுன்னுகம் மக்கள் வங்கி முன்பாக)

## கரபந்தாட்டம்......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றிக்கிண்ணம் பரிசளிக்கப்படும்

### "ஈழநாடு" வெற்றிக்கிண்ணம்

4 வீரர் போட்டியின் சாம்பியன் கோஷ்டிக்கு 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணம் பரிசளிக்கப்படும். 2-ம் இடத்தை வகிக்கும் கோஷ்டி பீ. இராசரத்தினம் அன்பளிப்பு வெற்றிக்கிண்ணத்தைப் பரிசாகப் பெறும். செற் அப் போட்டியில் சாம்பியனாகத் தெரிவாகும் கோஷ்டிக்கு அமரர் கந்தவனம் கனகரத்தினம் ஞாபகார்த்தக்கேடயமும், திரு. பொன்னம்பலம் அன்பளிப்பு வெற்றிக்கிண்ணமும் பரிசளிக்கப்படும். 2-ம் இடத்தைப் பெறும் கோஷ்டிதிரு. வன்னியசிங்கம் அன்பளிப்பு வெற்றிக்கிண்ணத்தைப் பெறும். சுற்றுப்போட்டிக்கான ஒழுங்குகளை போட்டி அமைப்பாளர் திரு. எம். ஜெகநாதன் கவனித்து வருகிறார்.

### இன்றைய போட்டிகள்

இன்றைய ஓவர் கேம் 6வீரர் போட்டியில் சிறுப்பிட்டி உதயதாரகை "ஏ" வி. கழக அணியை எதிர்த்து இணுவில் இளம்தளிர் "ஏ" வி. கழக அணியும், அளவெட்டி வளர்மதி வி. கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை வீனஸ் வி. கழக அணியும் மயிலிட்டி பூமகள் வி. கழக "ஏ" அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி. கழக "ஏ" அணியும் மோதும். ஏழாலை ஜிம்மிகாட்டர் வி. கழக அணியை எதிர்த்து தையிட்டி ஸ்ரார் வி. கழக அணியும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி. கழக "ஏ" அணியை எதிர்த்து சிறுப்பிட்டி உதயதாரகை வி கழக 'பீ' அணியும், நீர்வேலி-ஸ்ரார் அணியை எதிர்த்து இணுவில் இளம் தளிர் வி. கழக "பீ" அணியும் மோதிக் கொள்ளும் இப்போட்டிகள் மாலை. 7.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். ஓவர்-கேம் நான்கு வீரர்கள் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.கழக 'ஏ' அணியை எதிர்த்து சிறுப்பிட்டி-உதயதாரகை 'ஏ' அணியும், அளவெட்டி-வளர்மதி வி. கழக அணியை எதிர்த்து மயிலிட்டி-பூமகள் வி. கழக அணியும், உடுப்பிட்டி - நவஜீவன்ஸ் வி. கழக 'பீ' அணியை எதிர்த்து நீர்வேலி - ஸ்ரார் வி. கழக அணியும், தையிட்டி-ஸ்ரார் வி. கழக அணியை எதிர்த்து சிறுப்பிட்டி-உதயதாரகை வி. கழக அணியும் கலந்துகொள்ளும்.

தொடர்ந்து இடம்பெறும் செற் அப் போட்டியில் காங்கேசன்துறை - பொலிஸ் வி. கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் சர்வோதய வி. கழக அணியும், காரைநகர்-இலங்கை கடற்படை வி கழக அணியை எதிர்த்து காங்கேசன்துறை-ஐக்கிய வி. கழக 'ஏ' அணியும் போட்டியிடும். (ஈ)

## டைனமைற் வெடிகள் கடத்திய இளைஞர் யாழ். நகரில் கைது!

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து ரயில் மூலம் கடத்திவரப்பட்டதாக கூறப்படும் டைனமைற் வெடிகளும் வெடித் திரிகளும் யாழ்ப்பாணத்தில் கைப்பற்றப்பட்டன.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ரயில்மூலம் டைனமைற் வெடிகளும், வெடித் திரிகளும் கடத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து யாழ். சோனகதெருவிலுள்ள அசாத் ஸ்ரேட்டிற்குச் சென்றபோது அவ் வீதியால் சென்ற ஒருவரை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியபோது அவரே சம்பவதினம் ரயில்மூலம் டைனமைற் வெடிகளையும் வெடிநூல்களையும் கடத்தியவர் என்பது தெரியவந்தது.

சந்தேகநபரான அப்துல் காதர் அனீஸ் என்பவரை யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் காமினிதிசநாயக்கா, கான்ஸ்டபிள்கள் முஸ்தபா, சுஜைதீன், ஹேமரத்தின, ராஜரத்தின ஆகியோர் கைது செய்ததுடன் சந்தேகநபரால் கொழும்பிலிருந்து கடத்திக் கொண்டுவரப்பட்ட 70 டைனமைற் வெடிகளையும், 395 யார் வெடித் திரிகளையும் கைப்பற்றினர்.

சந்தேகநபர் யாழ் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட போது நீதிபதி சந்தேகநபரை இம்மாதம் 14ம் திகதி வரை றிமாண்டில்வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். கடந்த இரண்டு மாதங்களுக்கிடையில் மூன்று தடவை யாழ். சோனகதெருவிலிருந்து டைனமைற் வெடிகளையும் வெடித் திரிகளையும் பொலிசார் கைப்பற்றியுள்ளதுடன் இதுசம்பந்தமாகப் பலரைக் கைதுசெய்து வழக்குத்தாக்கல்செய்துள்ளனர். (கொ)

## துர்க்காதேவி ஆலயத்தில் பொங்கல் விழா

[அளவெட்டி]

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பொங்கல் விழாதானை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

பங்குனி இறுதித் திங்களை முன்னிட்டு நடைபெறும் இப்பொங்கல் அதிகாலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெறும். பொங்கல் விழா அன்றுகாலை 5மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். [கு]

## இலட்சார்ச்சனை

[யாழ்ப்பாணம்]

நந்தாவில் முனீஸ்வரர் கோவில் இலட்சார்ச்சனைப் பூர்த்திவிழா இன்று பகல் நடைபெறுகிறது.

## தாலிக்கொடி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜாவையும் தாலிக்கொடியையும் சுன்னுகம் பொலிசில் ஒப்படைத்தனர்.

மயிலணி கண்காணிப்புக் குழுவினரின் சேவையையும் பொதுமக்கள் அளித்துவரும் ஒத்துழைப்பையும் பாராட்டி யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா விரைவில் அந்தக் குழுவைச் சேர்ந்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கவிருக்கிறார்.

## ஒரு மூதாட்டி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தோடு கொழும்பு தலைமன்னார் ரயிலில்பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், பொல்காவலையில் வைத்து இம் மூதாட்டியுடன் பிரயாணம் செய்த ஒரு இளம் பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை திருடர்கள் அறுக்க முற்பட்டனராம். அப்பொழுது நடைபெற்ற இழுபறியிலும், அமளிதுமளியிலும் மூதாட்டி மயக்கமுற்றுர். மயக்கமுற்ற நிலையிலிருந்த மூதாட்டி மன்னார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டார். அதனுல் அன்றைய தினம் தலைமன்னாரில் இருந்து இந்தியாவுக்குப் புறப்பட்ட கப்பலில் மூதாட்டியும் அவருடன் ரயிலில் பிரயாணம் செய்தவர்களும் இந்தியாவுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. (இ)

## தொழிற்சங்க நடவடிக்கை குழுவின் ஐக்கிய மேதினம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் கூடிய தொழிற்சங்க நடவடிக்கைக் குழு மேதினவிழாவை ஐக்கிய மேதின விழாவாக, யு. என். பி. அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டித்தும் கொண்டாடுவதென தீர்மானித்துள்ளது. இக்கூட்டம் நடவடிக்கைக்குழு அமைப்பாளர் திரு. எஸ். விஜயானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில், லங்கா தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை வர்த்தக ஊழியர்சங்கம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், தொழில் நுட்ப ஊழியர் சம்மேளனம், அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம், ஜாதிகசுரு சங்கம், சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவை பங்குகொண்டன.

மேதினக் கூட்டத்தை பிரமாண்டமான முறையில் யாழ். திறந்தவெளி அரங்கில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைக்குச் சென்ற சுமார் 20 வயது மதிக்கத்தக்க நாகரிக உடை அணிந்த இரு இளம் பெண்கள், மேற்படி மாணவியை அவரது 'டடா' (தந்தை) தேடுவதாக கூறி, பாடசாலையிலிருந்து வெளியே அழைத்துச் சென்றனர் என்றும் மாணவியை மாட்டின் ரேட்டில் உள்ள ஒரு ஒழுங்கைக்குள் கூட்டிச்சென்று மாணவி அணிந்திருந்த 500 ரூபா பெறுமதியான காதணிகளைக் கழட்டிவிட்டு மாணவியை அவ்விடத்திலேயே விட்டுச் சென்றுவிட்டனர் என்றும் பொலிஸ்விசாரணையில் தெரிய வந்தது.

ணையை அழைத்துச் சென்ற இரு பெண்களில் ஒருவரின் கரல் சற்று வளைவான ... மற்றவர் சாதாரணமான பெண் என்றும் பாடசாலை மாணவியின் ... தையான திரு. செபஸ்தியாம்பிள்ளை சவரிமுத்து பொலிஸில் தெரிவித்துள்ள புகாரில் கூறியுள்ளார்.

### மற்றுமொரு சம்பவம்

இம்மாதம் 4ம் திகதி யாழ் கன்னியர்மடம் தமிழ்ப் பாடசாலைக்குச் சென்ற சுமார் 20 வயதுள்ள நாகரிக உடையணிந்த இளம்பெண் ஒருவர் அப் பாடசாலையில் கல்வி பயிலும் 5 வயது மாணவி ஒருவரிடம் சென்று அம் மாணவியை அவரது அப்பா தேடுவதாகக் கூறி பாடசாலையில் இருந்து யாழ் புகையிரத நிலைய ஒழுங்கைக்கு அழைத்துச் சென்று மாணவியின் காதிலிருந்த ... 'ஜிப்சி'யைக் கழற்றிவிட்டு மற்றுமொரு பெண்ணிடம் இம் மாணவியை ... ஒப்படைத்து விட்டுச் சென்றுவிட்டாராம். பின்னர் அப்பெண் மாணவியை பாடசாலைக்கு அழைத்துச் சென்று ஆசிரியையிடம் ஒப்படைத்துள்ளார் என்று மாணவியின் தாயான திருமதி சற்குணராசா யாழ். பொலிசில் புகார் செய்துள்ளார்.

இக்கொள்ளைக் கோஷ்டியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (கொ)

## இன்றையபலன்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பம்: அறவழியை நாடுவீர்கள் தெய்வசிந்தை மேலோங்கிநிற்கும் குடும்பத்தில் சுமூகமான நிலை தென்படும் புண்ணிய யாத்திரையொன்றை மேற்கொள்ள முற்படுவீர்கள்.

மீனம்: இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினம். கல்வியிலும் நல்ல அபிவிருத்தி தென்படுகின்றது. ஆசிரியர்களுக்கு செல்வாக்குபெருகஇடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

மக்கிஞென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி,மதுரை,பம்பாய்,கோலாலம்பூர்,சிங்கப்பூர்,பரிஸ்,லண்டன்,
துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கிஞென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

... ஈழநாடு லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி62-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 7-ம் திகதி ... வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office SriLanka under No. ... The Eelanaadu, Post Box No. 49, Telegram: "Eelanaadu"
Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org